**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 05.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

# திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
# மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். SA 15178/SCIC/2023</u>

திரு கே.வேலுச்சாமி — மேல்முறையீட்டாளர்
எண்.1722, 6வது அவென்யூ
அண்ணா நகர்
சென்னை-600 040.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
காவேரிப்பாக்கம்-632 508. …. பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 24/03/2025 அன்று ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **7. எனவே, பத்திரப்பதிவுத்துறைத் துணைத் தலைவர், வேலூர் மண்டலம் அவர்கள் மனுதாரர் தெரிவித்துள்ள புகாரின் மீது உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. பத்திரப்பதிவுத்துறைத் துணைத்தலைவர், வேலூர் மண்டலம் அவர்கள் இவ்வாணை கிடைக்கப் பெற்ற இரண்டு மாதத்திற்குள் மனுதாரர் திரு.வேலுச்சாமி அவர்களை விசாரணைக்கு அழைத்து, விரிவான விசாரணை நடத்தி, அவ்வறிக்கையினை 05/06/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**மேற்குறிப்பிட்டவாறு இன்று (05/06/2025) திரு.இ.அருள்சாமி, துணைப் பதிவுத்துறைத் தலைவர், வேலூர் பதிவு மண்டலம், வேலூர் அவர்கள் ஆஜராகி, ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு 02/06/2025 தேதியிட்ட விசாரணை அறிக்கையினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். எனவே, மேற்குறிப்பிட்ட விசாரணை அறிக்கையினை, துணைப்**

**பதிவுத்துறைத் தலைவர், வேலூர் பதிவு மண்டலம், வேலூர் அவர்கள் மனுதாரருக்கு இரண்டு நாட்களில், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண். SA 15178/SCIC/2023</u>

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.துணைப் பதிவுத்துறைத் தலைவர்
துணைப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
வேலூர் பதிவு மண்டலம், வேலூர்.

2.பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
காவேரிப்பாக்கம்-632 508.

**மேல்முறையீட்டாளர்**

திரு கே.வேலுச்சாமி
எண்.1722, 6வது அவென்யூ
அண்ணா நகர்
சென்னை-600 040.

RG/PC